சுதந்தரியம் ஓங்க சொல்வதை செய்யுங்கள்

Regd. No. M 6207

CONNEMARA PUBLIC LIBRARY
3 - JAN 1956
MADRAS

# கிராமோதயம்

ஆசிரியர் : ப. கோவிந்தசாமி

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 திருப்பூர் - ஏப்ரல் 15 * 1954 * விலை 1 அணா இதழ் 12

## ஐன்ஸ்டீனும், காந்தியும் செய்த மூன்றும் வகுப்பு ரயில் பிரயாணம்!

**[ காந்தியடிகளும், உலக விஞ்ஞான மேதை திரு. ஐன்ஸ்டீனும், ஆடம்பரமற்ற மூன்ருவது வகுப்பு ரயில் பிரயாணமே செய்துவந்தார்கள். இன்று அவரைப் பின்பற்றும் ஸ்ரீமான் பொதுஜனம் இதுபற்றி ஆறுதலடையலாம். ஆனல் இந்த மூன்றும் வகுப்பு பிரயாணிகளை, சுரண்டி அதிக வசதிகள் பெறும் பொதுஜன சேவகர்களைப் பற்றி என்ன கூறலாம் என்பதை பொதுஜனங்களே முடிவு செய்யட்டும். கீழே திரு. ஐன்ஸ்டீன் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஒரு பகுதியை தருகிருேம். — ஆசிரியர்]**

ஐன்ஸ்டீனை சந்திப்பதற்காக பெல்ஜிய ராஜ்யத்தின் ராணியார் முதன் முதலில் அவரை அழைத்தார். அவருக்காக ராணியம்மையார் வெகு நேரம் காத்திருக்க நேரிட்டது. அவரை ரயிலிலிருந்து அழைத்துவர அனுப்பியிருந்த கார் ஓட்டி ரயிலில் யாரும் வரவில்லை என்று திரும்பி விட்டார்.

ஐன்ஸ்டீன் உரிய காலத்தில் சொற்படி செய்வது வழக்கம். ராணியாருக்கு சந்தேகம் எழத் தொடங்கிவிட்டது. அவருடைய தோழியர் ஒருவரை பூங்காவிற்கு அனுப்பி அங்கு ஐன்ஸ்டீன் இருக்கிருரா என்று தேட சொன்னுர். மிகவும் உஷ்ணம் மிகுந்த மாலை. நடைபாதை எல்லாம் புழுதி. சில நேரத்திற்கு பின்னர் காட்டு ரோட்டில் ஒருவர் வருவதைக் கண்டார். அவர் மீது புழுதி படர்ந்திருந்தது. அவர் கூந்தல் காற்றில் பறந்தவண்ணம் இருந்தது. கையில் ஒரு பிடிலை சீராக வைத்துக்கொண்டு சந்தோஷமாக அவர் வாசித்துக்கொண்டிருந்தார்.

"நீங்கள் எனக்கு கார் அனுப்புவீர்கள் என்று நான் எப்படி அறிந்துகொள்வது?" என்ருர் ஐன்ஸ்டீன்.

பிறகு காரோட்டி விளக்கினுர்:—

"யாரும் முதல் வகுப்பு பெட்டியிலிருந்து வெளிவரவில்லை. நான் நம் ராஜாங்க விருந்தினர்கள் யாரும் மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்வார்கள் என்று கனவிலும் எண்ண முடியவில்லை."

*[From "Einstien — A Biography — By Antonina Vallentin]*

## நிபுணர்கள் தேவை !!

புது டில்லியில் அகில இந்திய கதர் கிராமக் கைத்தொழில் கண்காட்சி பற்றிய விபரம் வேறு இடத்தில் தரப்பட்டிருக்கிறது. அதில் ஸ்ரீ ஏகாம்பரநாதனின் "அம்பர் ராட்டை" பார்வையாளர்களின் மனதைக் கவர்ந்தது பற்றியும், கிராமாபிவிருத்திக்காக சிறு திட்டங்கள் வகுத்து, ஸ்தல முயற்சியால் எவ்வாறு நிறைவேற்றுவது என்பதைப் பற்றியும் கூறப்பட்டிருப்பதை வாசகர்கள் கவனித்திருப்பார்கள்.

"அம்பர் ராட்டை"யை அனுபவ ரீதியில் மக்களிடையே பரப்பவும், கிராமோதயத் திட்டம் மூலம் மக்கள் முயற்சியைக் கொண்டு கிராமாபிவிருத்திக்கு வேலை செய்வதற்கு இயந்திர, பொருளாதார, சமூக நுணுக்கங்களில் கல்வி பெற்றுள்ள வாலிபர்கள் தேவை. அவர்கள் படிப்பு, அனுபவம், வேலையிலுள்ள ஆற்றல், முதலியவைகளைப் பார்த்து தகுந்த ஊதியம் (ரூ. 75 முதல் ரூ. 125 வரை) தரப்படும்.

தேவையான நபர்களை தேர்ந்தெடுப்பதற்கு மே மாதம் இறுதியில் நெல்லை ஜில்லாவில் ஒரு கிராமோதய பயிற்சி முகாம் நடத்தப்படும். அதில் கலந்துகொண்டு, பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டால் சர்வ சேவா சங்கத்தில் சேவை செய்ய விரும்புவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும். விண்ணப்பங்களைப் பார்த்து மேல்விபரங்கள் அனுப்பி வைக்கப்படும்.

கோவில்பட்டி,
1—4—1954

செயலாளர்,
கிராமோதய பயிற்சி முகாம்,
C/o அகில பாரத சர்வ சேவா சங்கம்,
திருநெல்வேலி டிவிஷன், கோவில்பட்டி.

## கைராட்டை நூற்போர்களுக்கு...

**கரூர்**

சமீபத்தில் எமது அகில பாரத சர்க்கா சங்கத்தின் கரூர் கிளையில் நடைபெற்ற சில வருந்தத்தக்க கையாடல்கள் பற்றிய விபரங்கள் தெரியவந்துள்ளன. நெசவாளிகளின் கணக்குகளில் நூல் தவருன அதிகப்பற்று எழுதியும், நூற்போர்களிடம் குறைந்த விலைக்கு நூல் கொள்முதல் செய்து அதை சர்க்கா சங்கத்தின் நிர்ணய விலைக்கு உபயோகப்படுத்தியும், மற்றும் பல முறைகளில் ஷை கிளை நிர்வாக பொறுப்பிலிருந்த தொண்டர்கள் கையாடல் செய்திருப்பதாக கருதப்போதிய ஆதாரமிருக்கின்றது.

**காரணம்**

இம்மாதிரி கையாடல்களுக்கு காரணம் கைராட்டை நூற்போர்கள், நமது சங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதங்களில், தாங்கள் நூற்கும் நூலை அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் விற்பனை செய்வதற்கு பதில், யாரிடமும், எந்த விலைக்கும் விற்றுவிடுவதினுல்தான் என்று நம்புகிருேம்.

(தொடர்ச்சி 55-ம் பக்கம் காண்க)

3 - JAN 1956



# கிராமோதயம்

ஏப்ரல் 15 1954

## சுதேசீயம் ஓங்க சொல்வதை செய்யுங்கள்!!

**சுதேசி விரதம்: கோரிக்கைகள்**

**** இன்றும்கூட இந்தியாவில் தயாரித்த பொருட்களையே வாங்கவேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு பொதுஜன இயக்கம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று இந்திய முதலாளிகளும், வர்த்தகர்களும் கோருகின்றனர். மக்கள் சுதேசிப் பொருட்களை சிறிது நஷ்டமடைந்தாலும் பொருட்படுத்தாமல், வாங்கவேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர்.

**முடியாமைக்குக் காரணம்**

ஆனால் இன்று சர்க்கார், உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள், கைத்தறி நெசவாளர்கள், யாவரும் முயற்சி செய்தபொழுதிலும் "சுதேசிய"த்தை ஏன் நிரந்தரமாக ஏற்க மறுக்கிறார்கள்? இந்தக் கேள்வியின் பதில்கள் சில கசப்பான அடிப்படை விஷயங்களை வெளிப்படுத்துகின்றன.

**கசப்பான உண்மைகள்**

இந்திய கைத்தொழிலதிபர்கள் யாவரும் ஜனங்கள் இந்தியாவில் தயாரான பொருட்களையே வாங்க வேண்டுமென்று விரும்புகின்றனர். கைத்தறி நெசவாளிகள் மக்களெல்லோரும் கைத்தறித் துணியையே ஆதரிக்கவேண்டும் என்று எண்ணுகிறார்கள். கதர் உற்பத்தியாளர்கள், அனைவரும் கதரணியவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் பிறருக்கு செய்யும் இந்த உபதேசத்தை எத்தனை முதலாளிகளும், உற்பத்தியாளர்களும் கடைப்பிடிக்கிறார்கள் என்பதுதான் கேள்வி? இந்த கேள்விக்கு நூற்றுக்கு தொண்ணூற்றுஐந்து பேர்களிடமிருந்தும் "இல்லை" என்றே பதில் கிடைக்கும். இதுதான் 'சுதேசி' பிரசாரம் பலிக்காமலிருப்பதற்குக் காரணம்.

**ஏமாற்றினார்கள்**

தேச விடுதலைக்குமுன், மக்கள் உணர்ச்சிவசமாக சுதேசியத்தை விரும்பிக் கடைப்பிடித்த பொழுது, தொழிலதிபர்களும், உற்பத்தியாளர்களும், அவர்களிடம் உண்மையாக நடந்து கொள்ளவில்லை. அவர்கள் மக்களிடம் பரவியிருந்த 'சுதேசி' மனப்பான்மையை மக்களை சுரண்டுவதற்காகவே பயன்படுத்தினார்கள். இந்த இயக்கத்தின் வேகம் காரணமாக ஆங்காங்குள்ள மில் முதலாளிகளின், பணக்குவியல் பெருகிய கதை யாருக்குத் தான் தெரியாது!

**சுதேசி பிரசாரகர்களின் வெளிநாட்டு ஆடம்பரங்கள்!**

இந்த முதலாளிகளும், தொழிலதிபர்களும் ஆடம்பரமான வெளிநாட்டு மோட்டார்கார்கள், வெளிநாட்டு ரேடியோக்கள், குளிர்ச்சியந்திரங்கள் (Refrigerators,) குளிராக்கும் கருவிகள், சூடாக்கும் கருவிகள், தளவாடங்கள், துணிகள், சிகரெட்டுகள் ஆகிய என்னென்னமோ சாமான்களை எல்லாம் உபயோகப்படுத்துகிறார்கள்! அவர்களுக்கு இந்திய (ஆயுர்வேதம், சித்தம், யுனானி முறைகள்) வைத்திய முறைகளும் பிடிக்காது. அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யும் பொருட்டு, தேசீய பொருளாதாரமும், வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்கவும், சுதேசிப் பொருட்களை உபயோகிப்பதின் அவசியத்தைப் பற்றியும் பேசுகின்றனர். ஆனால் அவர்கள் வாங்கும் பொழுது நவீன நாகரீகம், சௌகரியம், நேர்த்தி, விலை மலிவு, முதலியவைகளைப்பற்றியே கவனம் செலுத்துகிறார்கள்.

உற்பத்தி செய்யும்பொழுதும் அவர்கள் தியாகத்தைப்பற்றி சிந்திப்பதில்லை. பேராசையையும், அமிதலாபத்தையுமே கருதுகின்றனர்.

**சர்க்கார் சலுகைகள் பெறுவதற்கு கூட்டு முயற்சிகள்**

தனக்கனுகூலமான சலுகைகளை பெறுவதற்காக எல்லா தொழில்களிலும் அதிபர்களின் சங்கங்கள் இருக்கின்றன. இதே சங்கங்கள் தக்க சமயத்தில் விலையை அதிகரிப்பதன் மூலம் அதிகம் சிரமப்படாமல் அமிதலாபம் அடையவும் வழி செய்கின்றன. உற்பத்தி, வினியோகம், விற்பனை ஆகிய எந்த வேலையிலும் அந்த உற்பத்திப் பொருட்களை உபயோகிப்பவர்களின் நலன் கவனிக்கப்படுவதில்லை!

**வெளிநாடுகளில்**

வெளிநாடுகளில் இம்மாதிரி உற்பத்தியாளர்கள் ஸ்தாபனங்களின் முக்கிய வேலை உபயோகிப்போருக்கு சிறந்த, குறையற்ற பொருட்களை கிடைக்கும்படியாக, தனித்தனி தொழிற்சாலைகளை கட்டுப்படுத்தி, உயர்ந்தரக உற்பத்திக்கு ஏற்பாடு செய்வதே ஆகும்!

**மட்டரகத்தயாரிப்பில் ஒற்றுமை**

இந்திய வர்த்தக ஸ்தாபனத்தின் எதன் அச்சிட்ட கடிதத்தாள்களையும் பாருங்கள். தவறாமல் அவை உயர்ந்த வெளிநாட்டு காகிதத்திலேயே தயாரிக்கப்பட்டிருக்கும். இந்திய தொழிலதிபர்கள் ஏன் தாங்கள் பிரசாரம் செய்வதை பின்பற்றுவதில்லை? ஏனென்றால் தாம் தயாரிக்கும் பொருட்களைப் போலவே, இதர சுதேசி தொழிலதிபர்கள் தயாரிக்கும் பொருட்களும் மட்டரகமானவை என்று அவர்கள் நன்கு அறிவார்கள்!!

**பெயரைக்கெடுக்கும் பெருச்சாளிகள்**

வெளி நாடுகளில் நமது தேசத்தின் நலனை சீர்குலைப்பதற்கு நமது வர்த்தகர்களில் பெரும்பாலோர் வேலைசெய்து வருகிறார்கள் என்றே கூற வேண்டும். இம்மாதிரி சுயநலம் படைத்த ஒரு சில வர்த்தகர்கள், விவேகாநந்தரும், ராமதீர்த்தரும், காந்தியடிகளும் தேடித்தந்த தேசிய கௌரவத்தை பாழ்படுத்திவிடக்கூடும்.

**சிறு கைத்தொழிலாளர்களும் அவ்வாறே!!**

மேலேகூறிய விபரீத மனப்போக்கு பெரிய தொழிலதிபர்களுக்குமட்டிலுமே பொருந்தும் என்பதற்கில்லை. இது சிறு சிறு குடிசைத் தொழில்கள் செய்பவர்கள், கைத்தறி நெசவாளர்கள் போன்ற மற்ற யாவருக்கும் பொருந்தும். கைத்தறி நெசவாளிகளின் பல ஸ்தாபனங்கள் தேசமெங்கும் தோன்றியுள்ளன. மக்களனைவரும் கைத்தறி துணியை ஆதரிக்க வேண்டுமென்றும் இந்த ஸ்தாபனங்கள் கோரிவருகின்றன.

ஆனால் தேசத்தில் எத்தனை கைத்தறி நேசவாளர்கள், கைத்தறித் துணியே அணிகின்றனர், செக்கெண்ணெயே வாங்குகின்றனர், கையினால் செய்த வெல்லம் அல்லது சர்க்கரையை உபயோகப்படுத்துகின்றனர், சித்தம் அல்லது ஆயுர்வேத முறையில் வைத்தியம் செய்துகொள்கின்றனர்?

3 - JAN 1956



**சொல்வதை செய்தால் பயன் உறுதி**

நமது தேசத்திலுள்ள $1\frac{1}{2}$ கோடி கைத்தறி நெசவாளிகளும், கதர்உற்பத்தி, செக்கெண்ணை ஆட்டுதல், கரும்பு சர்க்கரை தயாரித்தல், மாவு அரைத்தல் முதலிய பல வேலைகளில் ஈடுபட்டிருக்கும் அனைவரும் தாம் பிறருக்கு உபதேசம் செய்வதை, தாமே பின்பற்றுவார்களேயானால், அவர்கள் இன்று அவதிப்படும் பொருளாதார இன்னல்கள் யாவும், நொடி நேரத்தில் பறந்தோடிவிடும்! இந்த பொருட்களை உற்பத்திசெய்வோர் யாவரும் அதே பொருட்களை உபயோகிப்பவர்களும் ஆவர். அவர்கள் அனைவரும் தாம் போதிப்பதை கடைப்பிடித்தொழுகத்துடங்குவார்களானால், பொருளாதார விடுதலைக்கு ஒரு பெரும் புரட்சி தோன்றி விடும்!!

இந்திய தொழிலதிபர்களும், குடிசைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களும், சுதேசியத்தை தாமே கடைப்பிடிக்கத் துடங்கிவிட்டால் "சுதேசி" பிரசாரம் தேவையிராது.

— பேராசிரியர் எம். ஆர். அகர்வால்

---

*(53ம் பக்கத் தொடர்ச்சி)*

**கைராட்டை நூற்போர்களுக்கு...**

**மாற்று**

ஆகையால் நூற்போர்கள், இனிமேல் தமது நூலை எமது கிளை வஸ்திராலயங்களில் நேரடியாகவே, நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்து பயனடைய வேண்டுகிறோம்.

**விலை விகிதங்கள்**

அகில பாரத சர்க்கா சங்கம், மார்க்கெட்டில் பஞ்சு விற்பனை விலை விகிதத்தையும், கதர் விற்பனை விலையையும் அனுசரித்து, நூற்போர், நெசவாளிகளுக்கு வாழ்க்கைக்கூலி கிடைக்கும்படியாக அவ்வப்பொழுது நூல் விலையை நிர்ணயித்து வருகிறது. இன்றுள்ள நிலையில் 4 அடி சுற்றளவுள்ள வீசனத்தில் 640 சுற்றுகள் கொண்ட ஒரு சிட்டம் விலை ரூ. 0—4—0 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஏற்றத்தாழ்வுகள் வந்தாலும் சிட்டம் விலை நான்கணுவுக்கு சற்று ஏறக்குறையத்தான் இருந்துவரும். நடைமுறையில் அமுலிலிருக்கும் நூல், பஞ்சு, பட்டைப்பஞ்சு, கதர் முதலியவைகளின் விலை விகிதங்கள் அட்டையில் ஒட்டி வஸ்திராலயங்களில் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கும்.

29—4—'54.
சேவாகிராமம், — காரியதரிசி,
அகில பாரத சர்வ சேவா சங்கம்'

## அகில இந்திய கதர் கிராமக் கைத்தொழில் கண்காட்சி — புது டில்லி

அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில் போர்டாரால் அமைக்கப்பட்டிருக்கும் மேற்படி கண்காட்சியை சென்ற ஏப்ரல் மூன்றும் தேதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு ஜனாதிபதி பாபு ராஜேந்திரபிரசாத் அவர்கள் திறந்துவைத்தார்கள். அவருடன் பிரதம மந்திரி ஸ்ரீ ஜவஹர்லால் நேருவும், ஐக்ய நாட்டு ஸ்தாபனத் தலைவி ஸ்ரீமதி விஜய லட்சுமி பண்டிட் அவர்களும் விஜயம் செய்திருந்தார்கள். கதர் போர்டின் தலைவர் ஸ்ரீ வைகுந்தலால் மேத்தா அவர்கள் எல்லோரையும் வரவேற்று பல பகுதிகளையும் பார்வையிடச் செய்தார்.

கண்காட்சியை திறந்துவைத்து ஜனாதிபதி அவர்கள் கீழ்கண்டவாறு கூறினார்கள்:—

"குடிசைத் தொழில்களை ஆரம்பிக்க பெருத்த மூலதனம் ஏதும் தேவையிராது. தொழில் நுணுக்க நிபுணர்களும்தேவையில்லை. சாதாரணமான எவரும் சிறிது நாள் அனுபவத்தைக் கொண்டு திறமையாக குடிசைத் தொழில்களில் எதையும் பழகி நடத்திவரலாம். வேறு வேலை செய்பவர்களும் தமது ஓய்வு நேரங்களில் இவைகளைச் செய்துவரலாம். நமது தேசத்திலிருக்கும் விவசாயிகளில் பெரும்பான்மையினர் வருடந்தோறும் பல மாதங்களுக்கு வேலையில்லாமலிருக்கின்றனர். பொதுமக்கள் இச்சிறு கைத்தொழில்களுக்கு போதிய ஆதரவு காண்பித்தார்களேயானால், இந்த விவசாயிகள் அம்மாதிரி சிறு குடிசைத் தொழில்களை ஆரம்பித்து, தங்கள் வீண்பொழுதை பயன்படுத்திக் கொள்ளுவார்கள். ஆகையால் தேசத்தின் பொருளியல்பில் குடிசைத் தொழில்களுக்கு முக்கியமான ஒரு பங்கு உண்டு என்பதில் சந்தேகமில்லை."

பிரதம மந்திரி ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

"உலகில் இன்று கைத்தொழில் நுணுக்க வளர்ச்சி மிகவும் அதிகரித்து வருகிறது. இதன் பயனாக அணுகுண்டும், ஜலவாயு குண்டும் உருவாகி விட்டது. இதனால் உலகிற்கே பேராபத்து விளையக்கூடும். அணுகுண்டு ரகசியத்தை மனிதனுக்கு உதவியாக பயன்படுத்த முடியும். ஆனால் ஜலவாயு குண்டு முற்றிலும் அழிவுக்காகவே தோன்றியது! ஆகையால் தற்கால வாழ்க்கை முறைகளை இந்த தொழில் நுட்ப முன்னேற்றத்துடன் எப்படி பிணைப்பது என்பதே இன்று மனிதன் முன்னிற்கும் முக்கிய பிரச்னை. இந்தியாவில் நமக்கு இது வேறுவிதமாகத் தோன்றியுள்ளது. நாம் இந்த நுட்பங்களை பயன்படுத்தாமல் கொஞ்சமும் முன்னேற முடியாது! நாம் நமது சுதந்திரத்தைக் காக்கவும், நமது ஏழ்மையை அகற்றவும் கூட சக்தியற்றவர்களாகி விடுவோம்.

"ஆகையால் இன்றுள்ள சூழ்நிலையில் கிராமக் கைத்தொழில்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க உதவக்கூடும். ஒரு சமூகத்தின் உண்மையான திறமையை அதிலிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கொண்டு அளவிடலாம். ஆகையால் கிராமக் கைத்தொழில்களை தேசத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்காக மட்டிலுமின்றி, வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றுவதற்கும், ஈடுபடுத்தலாம்!"

தேசத்தில் பல்வேறு பாகங்களிலிருந்தும் பல ஸ்தாபனங்கள் இந்த கண்காட்சியில் கலந்துகொண்டிருப்பதால் வேறெங்கும், என்றும் கண்டிராத கதர், கிராமக் கைத்தொழில் பொருட்கள் இந்த கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

கண்காட்சியில் முக்கியமான சில பகுதிகள் கீழ்கண்டவை:—

**குழந்தைகள் விடுதி**

பார்வையாளர்களுடன் வரும் குழந்தைகளை கண்காட்சி நடைபெறும்பொழுது பாதுகாத்து பராமரிப்பதற்கான இந்த விடுதியால் பார்வையாளர்களுக்கு பெருத்த உதவி கிடைத்தது மட்டுமின்றி, கிராமங்களில் பொதுநல சேவைகள் இருந்தால் எவ்வளவு பயனடைய முடியும் என்பதையும் விளக்குவதாக இருந்தது இப்பகுதி.

**பூமிதான யக்ஞம்:**

பூமிதான பகுதியில் படங்கள், அட்டைகள், புகை படங்கள், ஓவியங்கள் மூலம் விநோபாஜியின் பூமிதான யக்ஞ இயக்கத்தைப் பற்றிய சிறந்த விளக்கங்கள் இப்பகுதியில் தரப்பட்டிருந்தது.

3 - JAN 1956



**கதர்:**

கைராட்டையில் சென்ற சில ஆண்டுகளில் அடைந்துள்ள முன்னேற்றமும், சீர்திருத்தமும்; பஞ்சு உடைத்தல், முதலிய உப தொழில்களில் அடைந்துள்ள சீர்திருத்தங்களையும் பருத்தியிலிருந்து, கதர் நெசவு செய்து சாயமிடும் வரை சகல தொழில் முறைகளும் இங்கு விளக்கப்பட்டன.

நான்கு மணி நேரத்தில் சுமார் ஒரு சதுர கெஜம் துணி பருத்தியிலிருந்து, நெசவு வரை சகல வேலைகளும் செய்து கிடைக்கச் செய்யக்கூடிய, திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த ஸ்ரீ ஏகாம்பர நாதனின் "அம்பர் ராட்டை" பகுதி விசேஷ கவனத்தைக் கவர்ந்தது.

தேசத்தின் நான்கு திசைகளிலிருந்தும் விற்பனைக்காக வந்திருந்த பெருவாரியான கதர் ரகங்களுடன் கூடிய "கதர் பஜார்" நேர்த்தியாக அமைந்திருந்தது.

**கிராமக் கைத்தொழில்கள்:**

கிராமங்களில் வீணுக்கப்பட்டு வரும் பொருட்களைக் கொண்டு எவ்வாறு செல்வம் சேர்க்கலாம் என்றும், சாதாரண சாதனங்களைக் கொண்டு எப்படி சிறு கைத்தொழில்களை நிறுவி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கலாம் என்றும் இப்பகுதி தெளிவாக்கியது.

**கிராமோதயத் திட்டம்:**

இப்பகுதியில் கிராமத்தில் எளிதில் கிடைக்கக் கூடிய பொருட்களையும், மூலதனத்தையும் ஈடுபடுத்தி எவ்வாறு முழு கிராமமும் சம்பூரண சுய தேவைப் பூர்த்தியடையலாம் என்று விளக்கப்பட்டிருந்தது. — ப. கோவிந்தசாமி

## விஞ்ஞானத்தைக் காட்டிலும் மனிதன் உயர்ந்தவன்!!

**நரியும் ஒட்டகமும்**

விஞ்ஞானம் மனிதனிடத்தில் பெரிய வேடிக்கை செய்துவிட்டது. அது கீழ்க்கண்ட கதை மாதிரி.

ஒரு ஒட்டகம் நரியிடம் கூறிற்று. "நான் உன்னை எனது முதுகின் மீது ஏற்றிக்கொண்டு நதியின் அக்கரை சேர்க்கிறேன்".

தண்ணீர் மிகவும் ஆழமாகப் பாய்ந்துகொண்டிருந்தது. நரி மிகவும் பயமடைந்திருந்தது. ஆனுல் இந்த உபாயத்தையும் அதேதான் ஒட்டகத்திடம் முதன் முதலில் கூறிற்று. நரியை முதுகில் ஏற்றிக்கொண்டு ஒட்டகம் நதியில் இறங்கிற்று. நல்ல பிரவாகத்தின் நடுவே வந்தபொழுது ஒட்டகம் திரும்பிப் போவதுதான் நலம் என்று கூற லாயிற்று. நரியோ ஒட்டகத்தை பயமுறுத்தியும், ஊளையிட்டும் திரும்பாமலிருக்க முயற்சி செய்தது. ஆனுல் ஒட்டகம் அங்கேயே படுத்துக்கொண்டு விட்டது. நரிக்கு நீர் சமாதி கிடைத்தது!!

**விஞ்ஞானமும்: மனிதனும்**

விஞ்ஞானமும் அதே போல் விஞ்ஞான ரீதியில் மனிதனுக்கு சமாதியளிக்க கவலைகொண்டுள்ளது. இந்த கற்பனையினுலேயே மனிதன் நடுங்குகிறுன். மனிதன் விஞ்ஞானத்தைக் காட்டிலும் உயர்ந்தவன்தான் என்பதை நிலைநாட்டவல்ல ஒரு உபாயத்தைத் தேடி அலைகிறுன்.

**விநோபாவின் வழி**

விநோபாஜி இந்தியாவுக்கு அம்மாதிரி ஒரு வழிகாட்டி வருகிறுர். உலகில் மிகவும் மேதையாக கருதப்படும் பெரியோர்களுக்கு புரியவில்லை. இப்பொழுது விஞ்ஞானம் மனிதனை தூக்கிக்கொண்டு போய்விட முடியாது. இனி மனிதன் விஞ்ஞானத்தின் கடிவாளத்தை தன் கையிலிருத்திக்கொள்வான். தனது கையில் சக்தியை அடக்கிக்கொள்வதின் பெருமையை விநோபாஜி காட்டி வருகிறுர்.

**பழமைகளை விட்டொழிக்க வேண்டும்**

பண்டைநாள் தொட்டு மனிதன் மதித்து வந்துள்ள சில கோட்பாடுகளை மறக்கவேண்டும். இது வரை ஏழைகளுக்கு உதவியளிக்க வேண்டுமானுல் நாம் பணக்காரர்களை பகைத்துக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டு வந்தது. பணக்காரருக்கு உதவியளிக்க வேண்டுமானுல் ஏழைகளை பகைத்துக்கொள்ள வேண்டும். ஆகையால் ஏழைகளுக்கு வாதாடுகிறவர்கள் பணக்காரர்களுக்கு விரோதிகளாகவும் பணக்காரர்களுக்கு வழக்காடுகிறவர்கள் ஏழைகளுக்கு விரோதிகளாகவும் இருந்து வந்துள்ளார்கள்.

**மனிதனைக் காட்டிலும் பணம் பெரிது ?**

ஏழ்மையில் ஏழைகளுக்கு நன்மை யில்லாதது போல் பணக்காரர்களுக்கு பணத்தினுலும் நன்மையில்லை. இருவருக்கும் நன்மை, தீமைகளின் ஆணிவேர் ஒன்றுதான். இருவரும் மனிதனைக் காட்டிலும், பணத்தை பெருமையாகக் கொண்டாடுகிறுர்கள். இருவரும் என்று முதல் பணத்தைக் காட்டிலும், மனிதனைப் பெரிதாக மதிக்கத் துடங்குகிறுர்களோ அன்று முதல் இருவரும் நலம் பெறுவர்.

**இருவரிலும் பேராசை**

பணக்காரராகவேண்டும் என்ற ஆசை ஏழையிடமும், பணக்காரரிடமும் இருக்கிறது. இருவரிலும் இந்த பேராசையை ஒடுக்கும் பொருட்டு ஏழைகளிடமும், பணக்காரர்களிடமும், விநோபாஜி தானம் வாங்குகிறுர்.

**தானம் கொடுப்போர் முட்டாள்கள் அல்ல**

தானம் கொடுப்பவர்கள் முட்டாள்கள் ஆவதில்லை. அவர் தன்னுடைய தளைகளை அறுத்தெறிகிறுர். இந்த விஷயத்தை நமது மக்கள் புரிந்துகொள்ளச் செய்வது மிகவும் அவசியம்.

மக்கள் இதை உணர்ந்துகொண்டால் மேற்கொண்டு தாமே நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள். இதனுல்தான் மக்கள் நமது நோக்கங்களைப் புரிந்துகொள்வதை முக்கியமாகக் கருதுகிறுர். — விநோபாஜி

(இந்தப் பத்திரிகை கையினுல் செய்த காகிதத்தில் அச்சிடப்பட்டது.)

## இந்த இதழில்


ஐன்ஸ்டீனும்—காந்தியும் செய்த மூன்றும் வகுப்பு ரயில் பிரயாணம் 53
நிபுணர்கள் தேவை 53
கைராட்டை நூற்போர்களுக்கு 53
சுதேசியம் ஓங்க சொல்வதை செய்யுங்கள்! 54
அகில இந்திய கதர் கிராமக் கைத்தொழில் கண்காட்சி–டில்லி 55
விஞ்ஞானத்தைக்காட்டிலும் மனிதன் உயர்ந்தவன் 56


"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0–1–0 வருட சந்தா ரூ. 1–8–0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.